Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MARCH 28, 2024

வியாழக்கிழமை மார்ச் 28, 2024 | ஒளி: 09 கதிர்: 222 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## 33 பேர் விடுதலை



Sea Of Sri Lanka எனப்படும் இலங்கை கடற்பரப்பில் இருவேறு சந்தர்ப்பங்களில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 36 இந்திய மீனவர்களில் 33 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



## மாணவிகளுக்கு 'பேட்' வவுச்சர்கள்

பாடசாலை மாணவிகளின் சுகாதாரமான பழக்கவழக்கங்களை அதிகரிக்கும் நோக்கில், இலங்கையில் உள்ள பாடசாலை மாணவிகளுக்கு சானிட்டரி நாப்கின்களை (அணையாடை ஆடை) (PAD) கொள்வனவு செய்வதற்கான வவுச்சர்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிறேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### விடுதலைப் புலிகளின் தலைவர்

# பிரபாகரனின் பெயரால் தேர்தல் உறுதிமொழி

## நாம் தமிழர் வேட்பு மனுக்கள் தள்ளுபடி?



இந்தியாவில் மத்திய அரசால் தடை விதிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் பெயரால் உறுதி மொழியேற்ற நாம் தமிழர் கட்சி வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் ஏற்கப்படுமா? தள்ளுபடி செய்யப்படுமா? என்கிற புதிய சிக்கல் எழுந்துள்ளது என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி, தமிழ்நாட்டில் 1991ஆம் ஆண்டு மே 21ஆம் திகதி மனித வெடிகுண்டால் படுகொலை செய்யப்பட்டார். இந்த படுகொலை சம்பவத்திற்குத் தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கமே காரணம் என நீதிமன்றங்கள் தீர்ப்பு அளித்துள்ளது.

மேலும், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரான பிரபாகரன், அந்த இயக்கத்தின் உளவுப் பிரிவு பொறுப்பாளர் பொட்டு அம்மான் உள்ளிட்டோர் முதன்மை குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர். இதனடிப்படையில், இந்தியாவில் இப்போதும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட இயக்கமாகக் காணப்படுகின்றது. ஆனால், நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் மற்றும் அவரது கட்சியினர் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்க கொடி மற்றும் பிரபாகரன் படங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில், 18ஆவது லோக்சபா தேர்தலுக்காக வேட்பு மனுத் தாக்கல் செய்த நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள்,

தொடர்ச்சி P2

## சாகல குழுவினர் இந்தியா பறந்தனர்

ஜனாதிபதி பணிக்குழாமின் பிரதானியும் தேசியப் பாதுகாப்பு ஆலோசகருமான சாகல ரத்நாயக்க உள்ளிட்ட குழுவினர் இந்தியாவிற்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர்

இந்தியாவுடனான நிலத்தொடர்புகள் குறித்துக் கலந்துரையாடுவதற்காக இந்தக் குழு இந்தியாவிற்குப் பயணித்துள்ளது.

இந்த கலந்துரையாடல் புதுடெல்லியில் வியாழக்கிழமை (28) இடம்பெறவுள்ளது.

போக்குவரத்து மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர்கள், ரயில்வே பொது முகாமையாளர், சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி அலுவலகத்தின் பணிப்பாளர் ஆகியோரும் இந்த விஜயத்தில் இணைந்துள்ளனர்.



## "ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடைபெறும்"



பாராளுமன்ற தேர்தல் இந்த வருடம் நடைபெற்றாலும், ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்தில் அதாவது செப்டெம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கும் இடையில் நிச்சயமாக நடைபெறும் என தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தால் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை என குறிப்பிட்டுள்ள அவர், பாராளுமன்ற கலைக்கப்பட்டால் தேர்தலை நடத்த முடியாது என நாங்கள் தெரிவிக்க முடியாது, அதனை நடத்தவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## முன்னாள் போராளி அதிரடியாக கைது

**க.அகரன்**

முன்னாள் போராளியும் போராளிகள் நலன்புரி சங்க தலைவருமான செ.அரவிந்தன் பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் முகப்புத்தக பதிவு தொடர்பில் கொழும்பில் உள்ள பயங்கரவாத புலனாய்வு பிரிவிற்கு அழைக்கப்பட்ட போதிலும் அவர் செல்லாத நிலையில் செவ்வாய்க்கிழமை (26) மீண்டும் அழைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், அவர் கொழும்பில் உள்ள பயங்கரவாத புலனாய்வு பிரிவுக்கு சென்ற சமயமே விடுதலைப் புளிகளுக்கு ஆதரவாக செயற்பட்டதாக தெரிவித்து கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சீனா–இலங்கைக்கு இடையில்

## 9 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஒன்பது புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடும் நிகழ்வு (26) சீனப் பிரதமர் லீ கியாங் மற்றும் இலங்கைப் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2



### ராஜிவ் காந்தி கொலை:

## மூவருக்கு கடவுச்சீட்டு

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் விடுவிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் மூவருக்கும் கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளதாகத் தமிழக அரசு தெரிவித்துள்ளது. குறித்த மூவருக்கும் இலங்கை துணை தூதரகத்தினால் கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்களை இலங்கைக்கு அனுப்ப அனுமதி கோரி இந்திய மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளதாகவும் தமிழக அரசு, சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.



தொடர்ச்சி P2

## காணிகளை விடுவிக்கக் கோரி கேப்பாப்புலவில் கவனயீர்ப்பு

**சண்முகம் தவசீலன்**

முல்லைத்தீவு - கேப்பாபுலவில் இராணுவத்தினர் வசமுள்ள தமது சொந்த காணிகளை விடுவிக்க கோரி கேப்பாப்புலவு இராணுவ படை தலைமையகத்திற்கு முன்பாக கிராம மக்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை புதன்கிழமை (27) முன்னெடுத்திருந்தனர்.

தொடர்ச்சி P2



## விசாவை மாற்ற முயற்சி

இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கும் முறையிலிருந்து விலகி, தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அந்தப் பணிகளை ஒப்படைக்கும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2




## சபாநாயகர் யாப்பா ஜெனீவா பயணம்

சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடைபெற்ற பாராளுமன்றங்களுக்கு இடையிலான ஒன்றியத்தின் 148ஆவது மாநாட்டில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையிலான இலங்கை பாராளுமன்றக் குழுவொன்று பங்கேற்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் மத்தும பண்டார, அசோக் அபேசிங்க, சுமித் உடுகும்புர, மஞ்சுள திஸாநாயக்க மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர ஆகியோர் இந்த தூதுக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

தொடர்ச்சி P2




## புறக்கோட்டை மிதக்கும் சந்தைக்கு புத்துயிர் கொடுக்கிறார் ஜப்பானியர்


புறக்கோட்டை மிதக்கும் சந்தையை (Floating Market) மீண்டும் புத்துயிர் பெறும். அதற்கு ஜப்பானிய முதலீட்டாளர் ஒருவர் முன் வந்துள்ளார்.

அதற்கான ஆரம்ப புரிந்துணர்வு ஒப்பந்தம் பத்தரமுல்ல நகர அபிவிருத்தி அதிகாரசபையில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத் மற்றும் ஜப்பானிய முதலீட்டாளர் அகிரா ஹிரோஸ் (Akira Hirose) தலைமையில் புதன்கிழமை (27) இடம்பெற்றது.

அதன்படி, புறக்கோட்டை மிதக்கும் சந்தையின் முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டை இந்த ஜப்பானிய முதலீட்டின் மூலம் மேற்கொள்ளப்படும்.

இந்த மிதக்கும் சந்தை வளாகம் முறையாக நிர்வகிக்கப்படவில்லை என கடந்த காலங்களில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## மாணவிகளுக்கு 'பேட்' வவுச்சர்கள்

போதுமான சுகாதார வசதிகளைப் பெறுவது சவாலானது என்று தெரிவித்துள்ள அவர், எதிர்வரும் புத்தாண்டுக்குப் பின்னர் வவுச்சர்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கடினமான, மிகக் கடினமான, தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் மற்றும் வறுமையைக் கொண்ட பாடசாலைகளில் உள்ள சுமார் 800,000 பாடசாலை மாணவிகளுக்கு சானிட்டரி நாப்கின்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அதற்கான அமைச்சரவைப் பத்திரங்கள் தற்போது ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்காக அரசாங்கத்தினால் செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படும் நிதி சுமார் ஒரு பில்லியன் ரூபா எனவும், வவுச்சர் அட்டை ஒன்றின் பெறுமதி சுமார் 1,200 ரூபாய் எனவும், பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த பெண் பிள்ளைகளைப் பலப்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு ஆதரவளிப்பதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும் எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

## சபாநாயகர் யாப்பா ஜெனீவா பயணம்

"பாராளுமன்ற இராஜதந்திரம்: சமாதானம் மற்றும் புரிந்துணர்விற்கான உறவுகளைக் கட்டியெழுப்புதல்" என்ற தொனிப்பொருளில் இந்த வருடம் நடைபெற்ற மாநாட்டில் உரையாற்றிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அரசாங்கங்களுக்கும் குடிமக்களுக்கும் இடையிலான பாலமாகப் பாராளுமன்ற இராஜதந்திரம் செயற்படுவதாகவும், மக்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளைக் கருத்திற்கொள்ளும் எனவும் தெரிவித்தார்.

# பிரபாகரனின் பெயரால் தேர்தல் உறுதிமொழி

தடை செய்யப்பட்ட இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் பெயரில் உறுதிமொழிகளை ஏற்றிருப்பது பெரும் சர்ச்சையாகியுள்ளது. இந்திய அரசியல் சாசனத்தை ஏற்றுக்கொண்டு அதற்கு கீழ்ப்படிந்து நடப்பதாக உறுதி மொழி தரும் வேட்பாளர்கள், இந்திய அரசால் தடை செய்யப்பட்ட இயக்கத்தின் தலைவர் பெயரால் உறுதியேற்கிறேன் என தெரிவிப்பது சட்டத்துக்கு எதிரானது என்கின்றனர் அரசியல் பார்வையாளர்கள்.

இந்திய அரசியல் சாசனத்துக்கு எதிராக, இந்தியச் சட்டத்துக்கு எதிராக உறுதி மொழி அளித்த நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர்களின் வேட்பு மனுக்களைத் தேர்தல் அதிகாரிகள் தள்ளுபடி செய்யவும் வாய்ப்புகள் அதிகம் உண்டு எனவும் அரசியல் பார்வையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



## 9 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

தியானன்மென் சதுக்கத்தில் உள்ள மக்கள் மாவீரர் நினைவிடத்தில் பிரதமர் மலர் தூவி அஞ்சலி செலுத்தியதுடன், சீன இராணுவத்தினரின் மரியாதையைப் பெற்றுக்கொண்ட பின்னர் இருதரப்பு கலந்துரையாடல்களும் ஆரம்பமாகியுள்ளன.

பின்னர், பெய்ஜிங்கில் உள்ள கிரேட் ஹாலில் நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தையின் போது, பொருளாதார ஒத்துழைப்புடன் சமூக, கலாசார, கல்வி மற்றும் விவசாயத்துறைகளில் ஒட்டுமொத்த ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்தும் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒன்பது புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் ஊடாக இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் ஒத்துழைப்பின் புதிய அத்தியாயம் ஆரம்பிக்கப்படும் என இரு நாட்டுப் பிரதமர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இலங்கையின் சார்பில் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்கவும், சீனா சார்பில் ஒன்பது அமைச்சுக்களின் செயலாளர்களும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் சீன மக்கள் குடியரசின் அமைச்சர்கள், இலங்கை இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, அசோக பிரியந்த, பாராளுமன்ற உறுப்பினர் யாதாமினி குணவர்தன உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டுள்ளனர்.

## 33 பேர் விடுதலை

நெடுந்தீவு கடற்பரப்பில் கடந்த 15ஆம் திகதி கைது செய்யப்பட்ட 15 இந்திய மீனவர்களினதும் 17ஆம் திகதி கைது செய்யப்பட்ட 21 பேரினதும் வழக்கு ஊர்காவற்றுறை நீதவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் புதன்கிழமை(27) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது 33 மீனவர்கள் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாதங்கள் சிறைத்தண்டனை என்ற நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, படகோட்டிகளான இருவருக்கு 6 மாத சிறைத்தண்டனையும் ஒருவர் இரண்டாவது தடவையாக இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசித்தமையால் அவருக்கு ஒரு வருடச் சிறைத்தண்டனையும் விதித்து ஊர்காவற்றுறை நீதவான் ஜெ.கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

மூன்றாவது படகின் உரிமையாளர் படகில் இருந்தமையால் அந்த படகினை அரசுடைமையாக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

முன்னதாக 8 பேருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது மூவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளமையை அடுத்து, 11 இந்திய மீனவர்கள் இலங்கையில் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

## "ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடைபெறும்"

ஒரு சில மாதங்களிற்குள் இரண்டு தேர்தல்களை நடத்துவதில் ஏதேனும் பிரச்சினை உள்ளதா என்ற கேள்விக்கு, பிரச்சினைகள் காணப்பட்டாலும் உரிய விதத்தில் நாங்கள் அவற்றைக் கையாண்டு தேர்தலை நடத்தவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலை நடத்தவேண்டியுள்ளதால் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதில் எந்த தாக்கமும் ஏற்படாது அது உரியநேரத்தில் இடம்பெறுமெனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தல் செப்டம்பர் 17ஆம் திகதி முதல் ஒக்டோபர் 17ஆம் திகதிக்குள் நடைபெறும் ஜூலை மாத இறுதியில் அல்லது ஆகஸ்ட் மாதத்தில் இது குறித்த அறிவிப்பைவெளியிடுவோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## மூவருக்கு கடவுச்சீட்டு

அதற்கமைய, இந்திய மத்திய அரசாங்கத்தின் அனுமதி கிடைத்தவுடன், முருகன், ஜெயக்குமார் மற்றும் ராபர்ட் பயாஸ் ஆகிய மூவரும் ஒரு வாரத்திற்குள் இலங்கைக்கு அனுப்பப்படுவார்கள் என தமிழக அரசாங்கம் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

திருச்சி முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள முருகன் தனக்கு அடையாள அட்டை வழங்கக் கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு செவ்வாய்க்கிழமை (26) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே தமிழக அரசாங்கம் நீதிமன்றத்தில் இந்த விடயங்களை முன்வைத்துள்ளது.

தனது மகளுடன் வசிப்பதற்காக பிரித்தானியாவிற்கு செல்வதற்காக விசா பெற வேண்டியுள்ளதாகவும் அதற்குப் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை கட்டாயத் தேவையாகக் காணப்படுவதாகவும் முருகன் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், அடையாள அட்டையை வழங்குமாறு மறுவாழ்வு இயக்குநரிடம் கடந்த ஜனவரி மாதம் விண்ணப்பித்த போதிலும், இதுவரை பதில் வழங்கப்படவில்லை எனவும் இதனால் தனக்கு அடையாள அட்டை வழங்க மறுவாழ்வு இயக்குநருக்கு உத்தரவிட வேண்டும் எனவும் அவர் தனது மனுவில் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில், தமிழக அரசு முன்வைத்துள்ள விடயங்களைக் கருத்திற்கொண்டு, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள், இலங்கை தூதரகத்தினால் கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ள நிலையில், அடையாள அட்டை தேவையில்லை என கூறி முருகனின் மனுவை முடித்து வைத்து உத்தரவிட்டுள்ளனர்.

இதனிடையே, இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் விடுவிக்கப்பட்டுச் சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த சாந்தன் என்றழைக்கப்படும் டி.சுதேந்திரராஜா, நோய்வாய்ப்பட்டமையினால் கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காணிகளை விடுவிக்கக் கோரி கேப்பாப்புலவில் கவனயீர்ப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ள முல்லைத்தீவு கேப்பாப்புலவு இராணுவ படை தலைமையகத்திற்கு இலங்கையின் இராணுவ தளபதி வருகை தந்திருந்தார். அவரிடம் தமது சொந்த காணிகளை விடுவித்துத் தருமாறு கோரி மகஜர் கையளிக்கக் குறித்த இராணுவ தலைமையகத்திற்கு முன்பாக ஒன்று கூடி கவனயீர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர்

எனினும் இராணுவ தளபதியை தற்போது சந்திக்க முடியாதெனவும் இன்று (27) மாலை 3 மணியளவில் 5 நபர்கள் சந்திப்பதற்கு ஏற்பாடு மேற்கொண்டு தருவதாகவும் இராணுவத்தினால் தெரிவிக்கப்பட்டதையடுத்து குறித்த கவனயீர்ப்பினை நிறைவுக்குக் கொண்டு வந்திருந்தனர்.

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் தமது காணிகளை விரைவில் விடுவிக்கக்கோரி ஜனாதிபதிக்கும் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளருக்கும் கடந்த 11.03.2024 அன்று முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றினை கையளித்திருந்தனர். இதன்போது குறித்த கடிதத்தைத் தான் உரிய தரப்புக்களுக்கு அனுப்பி பத்து நாட்களில் ஒரு பதிலைப் பெற்று வழங்குவதாகத் தெரிவித்தார்.

இந்நிலையில் கேப்பாபுலவு மக்கள் மீண்டும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரைத் திங்கட்கிழமை (25) சந்தித்துக் கலந்துரையாடிய போது தமது காணிகளை விடுவிப்பது தொடர்பில் உறுதியான முடிவு இதுவரை கிடைக்கவில்லை என மாவட்டச் செயலாளர் தெரிவித்ததாக கேப்பாபுலவு மக்கள் தெரிவித்திருந்தனர்.

கேப்பாப்புலவு மக்களின் ஒருபகுதியினரின் காணிகள் விடுவிக்கப்பட்ட போதிலும் பாடசாலை, ஆரம்பச் சுகாதார நிலையம் , ஆலயங்கள் , தேவாலயம், பொதுநோக்கு மண்டபம் உள்ளிட்ட மக்களின் குடியிருப்புக்கள் இன்றும் இராணுவ கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது..

குறிப்பாக மக்களின் பயன்தரு தென்னை மரங்கள் பல குறித்த காணியிலேயே காணப்படுகின்றன. 62 நபர்களின் 171 ஏக்கர் காணிகள் தற்போது விடுவிக்கப்படாது இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

பல வருடகாலமாகத் தாம் தமது காணிகளை இழந்து சிரமங்களுக்கு மத்தியில் வாழ்வதாகவும் பல போராட்டங்கள் செய்தும் இதுவரை தீர்வு இல்லை என்றும் தமது காணிகளை விரைவில் விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறினால் மீண்டும் தொடர் போராட்டங்களில் ஈடுபடவுள்ளோம் என தெரிவித்திருந்த நிலையிலே இன்றையதினம் கேப்பாப்பிலவு இராணுவ படை தலைமையகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விசாவை மாற்ற முயற்சி

இதுவரை வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கும் முறையினால் அதன் முழு வருமானமும் நேரடியாக குடிவரவு திணைக்களத்துக்கு கிடைத்துள்ளதாகவும், இந்தப் பணியை ஒப்படைப்பதன் மூலம் பெரும் வருமானத்தை இழக்கும் அபாயம் உள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

# புறக்கோட்டை மிதக்கும் சந்தைக்கு புத்துயிர் கொடுக்கிறார் ஜப்பானியர்

இது தொடர்பில் அவதானம் செலுத்திய விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, தற்போது நாட்டில் பொருளாதார பிரச்சினைகளுடன் இதனை அபிவிருத்தி செய்வதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதியை அரச தனியார் பங்களிப்பின் கீழ் அபிவிருத்தி செய்யுமாறு அறிவுறுத்தினார்.

இதற்காக முதலீட்டாளர்களை முன்வருமாறு நகர அபிவிருத்தி அதிகார சபை அழைப்பு விடுத்துள்ளது. இதைத்தான் இந்த ஜப்பானிய முதலீட்டாளர் கண்டுபிடித்தார். மிதக்கும் சந்தை வளாகம் ஜப்பானிய நகரமாகவும் மிதக்கும் சந்தையாகவும் உருவாக்கப்படுகிறது.

இது ஜப்பானிய முதலீட்டாளருக்கு 30 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விடப்படும். வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் குறிவைத்து புறக்கோட்டை மிதக்கும் சந்தை வளாகம் சுற்றுலா நகரமாக நிறுவுவதே இதன் நோக்கமாகும். அதன் அபிவிருத்தித் திட்டக் காலம் 6 மாதங்கள் ஆகும்.

புறக்கோட்டை மிதக்கும் சந்தை, கொழும்பு புறக்கோட்டை, பெஸ்டியன் மாவத்தையில் அமைந்துள்ளது. இது 92 கடைத் தொகுதிகளைக் கொண்டுள்ளதுடன் பேர வாவியில் படகுகளில் பல கடைகள் நிறுவப்பட்டுள்ளன.

தற்போது அங்கு வியாபாரம் செய்து வரும் கடை உரிமையாளர்களுக்கு எவ்வித அநீதியும் ஏற்படாத வகையில் இதனை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நகர அபிவிருத்தி அதிகார சபைக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அப்போது அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவின் எண்ணக்கருவின் அடிப்படையில் புறக்கோட்டை மிதக்கும் சந்தை 2014 ஆகஸ்ட் 25 அன்று திறக்கப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்களின்படி மிதக்கும் வணிக வளாகத்தின் நிர்மாணத்திற்காகச் செலவிடப்பட்ட தொகை 352 மில்லியன் ரூபாவாகும். 05 வருடங்களில் மொத்த செலவில் 50% சம்பாதிப்பதே இந்த சந்தை வளாகத்தின் முதன்மையான குறிக்கோளாக இருந்தது.

ஆனால், திறக்கப்பட்ட போதும் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் இந்த மிதக்கும் வர்த்தக நிலையம் அபிவிருத்தி செய்யப்படாமல் அப்படியே கிடப்பில் போடப்பட்டிருந்தது. இங்குள்ள 92 கடைகளில் 80 சதவீத கடைகள் முறையான பராமரிப்பு இல்லாததால் மூடப்பட்டன.

உக்கிப்போகும் பலகைகள், முறையற்ற விளக்கு அமைப்பு, பாதுகாப்பின்மை, அசுத்தமான சுற்றுப்புறம், துர்நாற்றம் மற்றும் சட்டவிரோத மற்றும் ஒழுங்குமுறையற்ற செயல்களால், இந்த மிதக்கும் வணிக வளாகம் நாளுக்கு நாள் சீரழிந்து வருகிறது. இதனால், ஏற்கெனவே திட்டமிட்டபடி ஐந்தாண்டுகளுக்குள் செலவில் 50% சம்பாதிக்கும் திட்டம் தடைப்பட்டது.

அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மிதக்கும் சந்தையானது வர்த்தக மையம், வரலாற்று நகரம் மற்றும் ஒரு வணிக நகரம் ஆகிய மூன்று காரணிகளின் அடிப்படையில் கொழும்பு புறக்கோட்டையை அபிவிருத்தி செய்யும் செயற்பாட்டின் படி முழுமையான புனரமைப்புக்கு உட்பட்டு 2021ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் திகதி மீண்டும் திறக்கப்பட்டது. அது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பிரதமரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் ஆலோசனையின் பிரகாரம் திறக்கப்பட்டது. இதன் புனரமைப்புச் செலவு 25 மில்லியன் ரூபாயாகும்.

புறக்கோட்டை மிதக்கும் சந்தை புத்துயிர் பெற ஜப்பானிய முதலீட்டாளர்களுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட பின்னர் பேசிய நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத்,

"புறக்கோட்டை மிதக்கும் சந்தை புத்துயிர் பெறுவது குறித்து பல்வேறு முதலீட்டாளர்களுடன் கலந்துரையாடினோம். அதன்படி, எமக்குப் பொருத்தமான முதலீட்டாளரைத் தெரிவு செய்து அதைக் குத்தகைக்கு விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம். இந்த திட்டத்தைச் செயல்படுத்தும் போது, மிதக்கும் வணிக வளாகத்தில் உள்ள வணிக சமூகம் பாதிக்கப்படாது" என்றும் தெரிவித்தார்.




## பேராதனை பல்கலைக்கழக

# பழைய மாணவர் சங்க கூட்டம்

பேராதனை பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கத்தினுடைய கொழும்புக் கிளையின் 33ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 31ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணிக்கும் ஆரம்பமாகி மதியம் 12.30 மணிவரை நடைபெறவுள்ளது.

கொழும்பு 07இல் மலலசேகர மாவத்தையில் இல. 28/10 அமைந்துள்ள அபிவிருத்தி இலங்கை நிர்வாக நிறுவனத்தின் (SLIDA) பிரதான மண்டபத்தில் (Sanhinda) இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான விபரங்களை அறிந்துகொள்ள www.aaupcc.org எனும் இணையத்தளத்தினூடாகவோ அல்லது பொதுச் செயலாளர் பாலித சியம்பலபிட்டியவுடன் 077-7741616 எனும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ தொடர்புகொள்ள முடியுமென, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.



# ஆணைக்குழுவுக்கு சென்றார் கெஹலியவின் மகள்

தரம் குறைந்த மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்தமை தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் மகள் சமித்ரி ரம்புக்வெல்ல இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் புதன்கிழமை (27) காலை முறைப்பாடு செய்துள்ளார்.

விளக்கமறியலில் உள்ள தனது தந்தையின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதால், உடனடியாக விசாரணை நடத்தி நீதி வழங்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# “எங்களுக்கு உலகளாவிய பொறுப்பு உள்ளது”


நாட்டிற்குள் இயற்கை மற்றும் அவசரகால நிலைமைகளுக்கு முகங்கொடுக்க சரியான திட்டத்தை வைத்திருப்பது மிகவும் அவசியமானது. அத்துடன், இதுபோன்ற பேரழிவுகளை எதிர்கொள்ளும் பிற நாடுகளுக்கு உதவுவதற்கான திறனை நாம் உருவாக்குவது அவசியமாகும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இலங்கை பொறியியலாளர்கள் படையணியின் விசேட திறன்கள் மற்றும் தயார்நிலைகளை அவதானிப்பதற்காக இராஜாங்க அமைச்சர் தென்னகோன் செவ்வாய்க்கிழமை (26) மத்தேகொடவில் உள்ள இலங்கை இராணுவ பொறியியலாளர் படையணிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மத்தேகொடவில் உள்ள இராணுவ இரசாயன உயிரியல் கதிரியக்க மற்றும் அணுசக்தி படையணிக்கு வருகை தந்த இராஜாங்க அமைச்சரை, இலங்கை இராணுவ தொண்டர் படையின் கட்டளைத் தளபதியும், இலங்கை பொறியியலாளர் படையணியின் கேர்ணல் தளபதியுமான மேஜர் ஜெனரல் எம்.கே.ஜயவர்தன வரவேற்றுள்ளார்.

அதைத் தொடர்ந்து, மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இராணுவ உபகரணங்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளதுடன், இரசாயன உயிரியல் கதிரியக்க மற்றும் அணுசக்தி, வெடிகுண்டுகளை அகற்றுதல், மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் திறன்கள் மற்றும் இராணுவப் பொறியாளர்களின் செயல்பாடுகள் தொடர்பான விரிவான விளக்கக்காட்சியும்







இதன்போது, வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள இரசாயன, உயிரியல் கதிரியக்க மற்றும் அணுசக்தி, வெடிபொருட்கள் அகற்றல், மனிதாபிமான கண்ணிவெடி அகற்றல் முகாமைத்துவ கருவி மற்றும் உபகரணங்களை அமைச்சர் தென்னகோன் பார்வையிட்டதன் பின்னர் அதனுடன் தொடர்புடைய செயல்விளக்கம்களையும் இதன்போது கேட்டறிந்து கொண்டார்.

இலங்கை இராணுவ பொறியாளர் சேவைகளின் கேர்ணல் நிலைக்கான கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லங்கா அமரபால, பொறியியல் பிரதானி மேஜர் ஜெனரல் ஷேவான் குலதுங்க, GOC 59 பொறியாளர் பிரிவின் மேஜர் ஜெனரல் கபில டோலகே மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் உதய ஹேரத் (ஓய்வு) உட்பட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துக்கொண்டுள்ளனர்.

# அழகு சாதனங்களால் பேராபத்து

### வைத்திய நிபுணர்களின் சங்கம் எச்சரிக்கை

இலங்கை தோல் வைத்திய நிபுணர்களின் சங்கம் விடுத்த எச்சரிக்கையை அடுத்து, செவ்வாய்க்கிழமை (26) கொழும்பில் உள்ள பல முன்னணி அழகு சாதன பொருட்களின் விற்பனை நிலையங்களில் தேசிய மருந்துகள் ஒழுங்கு முறைப்படுத்தும் அதிகார சபையின் உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர்கள் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது, பதிவு செய்யப்படாத தோல் சிகிச்சை மருந்துகள் விற்பனை செய்யப்படுவதைக் கண்டறிந்துள்ளனர்.

இவ்வாறு விற்பனை செய்தவர்கள் கொழும்பு புறக்கோட்டையில் அழகு சாதன பொருட்களின் மொத்த விற்பனை நிலையங்களில் பதிவு செய்யப்படாத தோல் சிகிச்சை மருந்துகளைக் கொள்வனவு செய்ததாகத் தெரிவித்ததாகத் தேசிய மருந்துகள் ஒழுங்கு முறைப்படுத்தும் அதிகாரசபையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, கதிரேசன் வீதியில் உள்ள இரண்டு அழகுசாதனப் பொருட்களின் மொத்த விற்பனை நிலையங்களைச் சோதனை செய்ததில் 470க்கும் மேற்பட்ட தோல் சிகிச்சை மருந்துகளைக் கண்டுபிடித்துள்ளனர்.

குறித்த மருந்துகள் வைத்தியர்களின் பரிந்துரையில் மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும். இது ஒரு எளிமையான அழகுசாதனப் பொருள் அல்ல. இந்த பதிவு செய்யப்படாத மருந்துகள் இந்தியாவுக்குச் செல்லும் உள்ளூர் விற்பனையாளர்கள் கொண்டுவருவதோடு, சுங்க சாவடிகள் ஊடாகவும் நாட்டிற்குள் கொண்டுவரப்படுவதாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மூன்று மருந்து சேர்மானங்களைக் கொண்ட அத்தகைய மருந்துகளின் இரண்டு வகைகள் கைப்பற்றப்பட்டன. ஹைட்ரோகுவினோன், ட்ரெட்டினோயின் மற்றும் மொமடசோன் ஃபுரோயேட் கிரீம் ஆகியன 3 இரசாயன சேர்மானங்கள் ஆகும். அவற்றில் ஸ்டீராய்ட் மருந்தும் ஒன்றாகும். ஸ்டெராய்ட் மருந்துகள் உள்ளிட்ட தோல் நோய்களுக்கான மருந்துகள் கண்டிப்பாக வைத்தியரின் ஆலோசனையின் கீழ் பயன்படுத்தப்பட வேண்டும் அல்லது அது சருமத்தில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்று குறித்த அதிகாரி கூறியுள்ளார்.

நகரத்திலுள்ள அழகு சாதன



பொருட்களின் விற்பனை நிலையங்களில் கிடைக்கும் இவ்வகையான மருந்துகள் சருமத்தை வெண்மையாக்கும் அல்லது சுத்தப்படுத்தும் என நம்பி வாடிக்கையாளர்களை வாங்குவதற்குத் தூண்டுகிறது. இது பின்னர் அவர்களின் நிறத்தில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்துகிறது.

இவ்வகையான அழகு சாதன பொருட்கள் பற்றிய பல முறைப்பாடுகள் இலங்கை தோல் வைத்திய நிபுணர்களின் சங்கத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ளதோடு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மருந்துகளைக் கண்டிப்பாக மருத்துவரின் ஆலோசனையின் கீழ் ஆறு வாரங்களுக்கு மாத்திரமே பயன்படுத்த வேண்டும் என்றும், தொடர்ந்து பயன்படுத்தினால் புற்றுநோய் பாதிப்புகள் ஏற்படலாம் எனவும் இலங்கை தோல் வைத்திய நிபுணர்களின் சங்கத்தின் தலைவர் வைத்தியர் ஸ்ரீயானி சமரவீர தெரிவித்துள்ளார்.

“தற்போது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அத்தகைய மருந்துகளில் ஒரே ஒரு வகை மட்டுமே உள்ளது.

அந்த மருந்து மருந்தகங்களில் மட்டுமே விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. அழகு சாதன பொருட்களின் மொத்த விற்பனை நிலையங்களில் அல்ல. மெலஸ் மா எனப்படும் தோல் நிறமிக் கோளாற்றுக்கு சிகிச்சையளிக்க இந்த மருந்து பயன்படுத்தப்படுகிறது மற்றும் பரிந்துரைக்கப்பட்ட காலத்திற்கு மேலதிகமாக பயன்படுத்தினால் கடுமையான தோல் பிரச்சினைகள் ஏற்படலாம், இதன் காரணமாகப் பல முறைப்பாடுகள் கடைக்கின்றன” எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ‘எடிசன்’ விருது வென்ற ‘ஐயோ சாமி’

தென்னிந்தியாவின் சென்னையில் நடைபெற்ற 16ஆவது எடிசன் விருது வழங்கும் விழாவில், “ஐயோ சாமி” என்ற இலங்கைத் தமிழ்ப் பாடலைப் பாடிய விந்தி குணதிலக்க, 2023ஆம் ஆண்டின் சிறந்த உணர்வுப்பூர்வமான பாடலுக்கான விருதை வென்றுள்ளார்.

விருதினை பெற்றுக் கொண்ட விந்தி குணதிலக்க, நேற்று இரவு ஸ்ரீலங்கன் எயார் விமானமான UL 218இல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இந்த விருது வழங்கும் விழா சர்வதேச திரைப்படங்கள் மற்றும் பாடல்களை மதிப்பிடுவதற்காக நடத்தப்படுகிறது, மேலும் இந்த ஆண்டுக்கான விருது வழங்கும் விழா மார்ச் 24 அன்று இந்தியாவில் சென்னையில் நடைபெற்றது.

இப்பாடலை எழுதிய பொத்துவில் அஸ்மின் மற்றும் இப்பாடலுக்கு இசையமைத்த சனுக விக்ரமசிங்க ஆகியோரும் இவ்விருதுகளை பெற்றுக்கொள்ளும் நிகழ்வில் இணைந்து கொண்டனர்.





# மாணவிக்கு வித்தியாசமாக வடிவமைத்த தாத்தா

80 வயதான நபர் ஒருவர், 23 வயதான பல்கலைக்கழக மாணவியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்றுள்ளதாக பிலியந்தலை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதியவரின் பிடிக்குள் சிக்கிக்கொள்ளாத மாணவி, அங்கிருந்து தப்பியோடி வந்து, தன்னுடைய காதலனிடம் தெரிவித்துள்ளதாக பிலியந்தலை பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பேஷன் டிசைனிங் தொடர்பில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் 23 வயதான மாணவி, தனக்குத் தேவையான பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்காக, பத்திக் கைத் தொழிற்சாலைக்குச் சென்றுள்ளார்.

அவ்விடத்துக்குச் சென்றபோது, பகல் உணவுப் பொதியையும் எடுத்துச் சென்று, தொழிற்சாலைக்குப் பின்புறமாக வைத்துச் சாப்பிட்டுள்ளார்.

அப்போது அவ்விடத்துக்கு வருகை தந்த தொழிற்சாலையின் உரிமையாளரான 80 வயதான நபர், “மகளே எனக்கு ஒருவாய் சாப்பாடு ஊட்டிவிடு” எனக் கேட்டுள்ளார்.

தூரப் பிரதேசத்தில் இருந்து வந்திருந்து அந்த பெண், எவ்விதமான தயக்கமும் இன்றி, ஒருபிடி சோற்றை ஊட்டிவிட்டுள்ளார்.

சிறிது நேரம் கழித்து, “மகளே, சாப்பாடு சரியான சுவையோ, சுவை, இன்னுமொரு வாய் ஊட்டி விடவும்” என்று கேட்டுள்ளார்.

அவ்வாறு கேட்டுக்கொண்டே மாணவிக்கு அருகில் வந்த தாத்தா, அப்பெண்ணின் உடலைத் தொட்டு, ஆங்காங்கே வருடத் தொடங்கியுள்ளார். சற்றும் எதிர்பாராத அந்த மாணவி, சாப்பாட்டுப் பொதியை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு, கைப்பையையும் எடுத்துக்கொண்டு அவ்விடத்திலிருந்து கிளம்பி, தங்குமிடத்துக்குச் சென்றுள்ளார்.

தனக்கு நேர்ந்ததை தன்னுடைய காதலனிடம் தெரிவித்துள்ளார். அதன்பின்னர், காதலனுடன் சென்று பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.



# ரஞ்சனுக்கு எதிரான மோசடி வழக்கு ஒத்திவைப்பு

**மொஹொமட் ஆஸிக்**

கண்டி பிரதேசத்தை சேர்ந்த பெண்ணொருவரை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி அவரிடம் இருந்து சுமார் 10 இலட்சம் ரூபாய் மோசடி செய்தார் என குற்றஞ்சாட்டின்பேரில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், நடிகருமான ரஞ்சன் ராமநாயகவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கண்டி நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுவரும் மேற்படி வழக்கின் தீர்ப்பு, மார்ச் 27ஆம் திகதி வழங்கப்படவிருந்தது. எனினும், வழக்குத் தொடர்பில் இன்னும் ஆராயவேண்டியிருப்பதால், தீர்ப்புக்கான திகதியை ஒத்திவைப்பதாக நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

வழக்கில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட புதன்கிழமை (27) மன்றில் ஆஜராகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ‘நுகே வெவ’ குளம் மக்கள் பாவனைக்கு

**நூருல் ஹூதா உமர்**

வறட்சியான காலங்களில் விவசாயிகளின் பயிர்ச்செய்கைக்கு உதவும் வகையில் அம்பாறை லாகுகல ‘நுகே வெவ’ குளத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மக்கள் பாவனைக்காக கையளித்துள்ளார்.

சுமார் 8 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட இக்குளம் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்ட இந்நிகழ்வில், விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜீ. முத்துபண்டா, கடற்றொழில் மற்றும் நீரியல் வள மீன்பிடி திணைக்கள பணிப்பாளர் சுதாகரன் உட்பட அரச அதிகாரிகள் கலந்துக்கொண்டுள்ளனர்.



# ஐ.தே.க. வட்டார அமைப்பாளர் நியமனம்

ஐக்கிய தேசிய கட்சியின் மருதமுனை 04 மற்றும் 05ஆம் வட்டாரங்களுக்கான அமைப்பாளராக டிலிப் நௌசாத் அபூபக்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ், கட்சியின் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவினால் தெரிவு செய்யப்பட்டு, அவரது கையொப்பமிடப்பட்ட நியமனக் கடிதத்தை முன்னாள் பிரதி அமைச்சர் அனோமா கமகேவிடம் இருந்து இவர் பெற்றுக்கொண்டுள்ளார்.



**உங்களின் கவனத்திற்கு**

அடகு வைக்கப்பட்டு மீட்க முடியாமல் அறுதியாகவுள்ள உங்களின் தங்க நகைகளை எங்களால் மீட்கப்பட்டு உங்களுக்கு அதிகூடிய வலையை நாம் தருவோம்.

ஹனா கோல்ட் ஹவுஸ்
076 707 8969

# ‘பேட்’ பிரச்சினைக்கு நல்ல தீர்வை பெற்றுக்கொடுப்பதே சிறந்தது

காலவோட்டத்துக்கு ஏற்ப வாழவேண்டும். இல்லையேல் நோய்நொடிகள் தொற்றிக்கொள்ளும். ஆனால், இந்தக் காலவோட்டத்திலும் பழைமைவாதம் இன்னும் இறுக்கப்பற்றிப் பிடித்துக் கொண்டுள்ளமை வேதனையானது. நமது நாட்டு அரசியலில், மாதவிடாய்த் துவாய்களை (*Sanitary Napkin or Pad*) மீண்டும் பேசும் பொருளாகிவிட்டது.

வயதுக்கு வந்த பெண்கள் இருக்கும் வசதி குறைந்த வீடுகளில், மாதவிடாய்த் தாய்களுக்குச் செலவிடும் தொகை அதிகமாகும், நாளொன்றுக்கு மூன்று அல்லது நான்கு துவாய்களை பயன்படுத்தவேண்டும். ஒரு பக்கெட்டின் விலை சாரசரியாக 157 தொடக்கம் 350 ரூபாயாகும். இதேவேளை, இரண்டொரு பெண்கள் இருந்தால், குடும்ப சுமை இன்னும் அதிகரித்துவிடும்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான கருத்தாடல்கள் பொதுவெளியில் பேசப்படுகின்றன. யார்? யார்? போட்டியிடுகின்றனர் என்பதுபோன்ற பெயர்கள் அடிப்படத் தொடங்கிவிட்டன. எனினும், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சஜித் பிரேமதாச “*Pad Man*” ஆகியிருந்தார்.

தான் ஜனாதிபதியாகத் தெரிவானால், பெண்களுக்கான மாதவிடாய்த் துவாய்களை இலவசமாக அல்லது குறைந்த விலையில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பேன் என்று தெரிவித்திருந்தார். எனினும், அரசியலில் கேளிக்கையாகப் பார்க்கும் சிலர், அவர் “*Pad Man*” ஆகியிருந்தார்.

ஆனால், பொருளாதார சுமையின் காரணமாக, பருவமடைந்த பெண்களைக் கொண்ட குடும்பங்கள் இன்னும் சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர். மாதவிடாய் காலத்தில், அதிக வேதனை, உடல் ரீதியிலான அசௌகரியங்களால்

68 சதவீதம் முதல் 81 சதவீதம் வரையிலான மாணவர்கள் பாடசாலைக்கு (மாதவிடாய் காலத்தில்) செல்வதில்லை.

ஆடைகளுக்கு வெளியே மாதவிடாய் கசியும் என்ற அச்சத்தால், பாடசாலைக்குச் செல்லாத பெண்களின் எண்ணிக்கை 23 சதவீதத்துக்கும் 40 சதவீதத்துக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையில் இருந்தது. அப்பிரச்சினைக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை.

பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் மாதவிடாய்த் துவாய்களை பயன்படுத்துவதில்லை. பழைய துணிகளைக் கழுவியே பயன்படுத்துகின்றனர். இதனால், கர்ப்பைவாய் புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறான தொற்றுநோய்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவிகளின் சுகாதாரமான பழக்கவழக்கங்களை அதிகரிக்கும் நோக்கில், இலங்கையில் உள்ள பாடசாலை மாணவிகளுக்கு சானிட்டரி நாப்கின்களை (அணையாடை ஆடை) (PAD) கொள்வனவு செய்வதற்கான வவுச்சர்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிறேமஜயந்த தெரிவித்துள்ளார். அந்த அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

போதுமான சுகாதார வசதிகளைப் பெறுவது சவாலானது ஆகையால், எதிர்வரும் புத்தாண்டுக்குப் பின்னர் வவுச்சர்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். மாதவிடாய் பிரச்சினை மாதா, மாதம் ஏற்படும் பிரச்சினையாகும். அதற்கான துவாய்களை வாங்கிக்கொடுப்பதற்கு நல்லநேரம் பார்த்துக்கொண்டிருக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதுடன், இது தேர்தல்களை அடிப்படையாக கொண்ட அறிவிப்பாக இருந்து விடக்கூடாது.








## வாழ்வியல் தரிசனம்

வாய்மையுடன் வாழும் முறைமையினைச் சின்ன வயதிலேயே பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்க வேண்டும். உண்மையை மட்டுமே பேசவேண்டும். எவர் சொல்லும் பொய்களையும் நம்பக்கூடாது. தெளிவுடன் பேசவேண்டும். என சொல்லி வளர்த்தால் எல்லா இளம் தலைமுறைகளும் நல்லப்படியாக, நற்பிரஜைகளாக, உயர்வடைவர்.

சில பெற்றோர்கள் பிள்ளைகளின் முன்னிலையில் பேசக்கூடாதவைகளைப் பேசுவதுண்டு. எக்காரணம் கொண்டும் பொய்யான வாக்குறுதிகளைச் சொல்வதுகூட மகா பாவம். ஒருவரை ஏமாற்றுவது தன்னைத்தான் ஏமாற்றுவது போலவானது.

உள்ளதை, உள்ளப்படி பேச துணிச்சல் வேண்டும். ஆனால், ஒருவர் பற்றிய நம்பிக்கை, விசுவாசம் ஏற்பட்டால், அவர்களின் கூற்றுக்களை ஏற்க யாவரும் முன் வருவார்கள். எனவே, நெஞ்சத்தூய்மையுடன் சத்திய வழியில் நடப்பதே வீரமுமாகும். வாழ்மையே வாழ்வின் மேன்மை.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

# நடக்கப்போவது என்ன தேர்தல்?

முருகானந்தன்தவம்

நாட்டில் முதலில் நடக்கப்போவது ஜனாதிபதித் தேர்தலா பொதுத்தேர்தலா என கயிறுழுப்பு ஒரு புறம் நடந்து கொண்டிருக்க மறுபுறத்தால் மீண்டும் நாட்டிலும் ஆட்சியிலும் ராஜபக்‌ஷ குடும்பத்தின் அதிகாரத்தை நிலை நாட்டுவதற்கான திரை மறைவு வேலைகள் தீவிரம் பெற்று வருகின்றன. மொட்டை மீண்டும் மலர வைத்து ராஜபக்‌ஷ குடும்பத்தை மீண்டும் ஆட்சி பீடமேற்ற தற்போது மீண்டும் நாடு திரும்பியுள்ளார் 7 மூளைக்காரரான பசில் ராஜபக்‌ஷ.

தேர்தல் மேகங்கள் கருக்கட்டியுள்ள நிலையில், பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான பசில் ராஜபக்‌ஷ மீண்டும் நாடு திரும்பியுள்ளதால், தங்களின் ஆட்சியை மீள உருவாக்க முடியும், அதிகாரங்களை மீளப்பெற முடியும் என்று பொதுஜன பெரமுனவில் குறிப்பிட்டளவான அரசியல்வாதிகள் குதூகலித்து பசில் ராஜபக்‌ஷவின் மீள் வருகையைக் கொண்டாடுகின்றனர்.

7 மூளைக்காரரென மொட்டுத் தரப்பினரால் கொண்டாடப்படும் பசில் ராஜபக்‌ஷவினால் மீண்டும் ராஜபக்‌ஷ சகோதரர்களை ஆட்சி அரியணையில் ஏற்ற முடியுமா? கருகிய மொட்டை மீண்டும் மலர வைக்க முடியுமா என்பதே இன்று பலரினதும் கேள்வியாகவும் சந்தேகமாகவும் உள்ளது. இதற்கான விடையை அறிய வேண்டுமானால் சில வருடங்கள் பின்னோக்கி செல்ல வேண்டும்.

இலங்கையில் கடந்த 2005ஆம் ஆண்டு ராஜபக்‌ஷ குடும்பத்தின் ஆட்சி மலர்ந்தது. 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தலில் மஹிந்த ராஜபக்‌ஷ வெற்றி பெற்றார். பின்னர் 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாம் தடவையாகவும் வெற்றி பெற்று ஜனாதிபதியானார்.

மூன்றாவது தடவையாக 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தனது அரசில் அமைச்சராக இருந்தவரான எதிர்க்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிடம் தோல்வி கண்டதால் 2015ஆம் ஆண்டு ஜனவரி 9இல் ராஜபக்‌ஷ குடும்பத்தின் முதல் கட்ட ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டது.

இதனால் அடிபட்ட பாம்பாகச் சீறிக்கொண்டிருந்த ராஜபக்‌ஷ சகோதரர்கள் மீண்டும் ஆட்சியைப் பிடிக்க, அரியணையில் ஏற இனவாத ஆயுதத்தை கையில் எடுத்தனர். இதன் பெறுபேறாக மீண்டும் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்‌ஷவின் சகோதரரான பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டபாய ராஜபக்‌ஷ தனது சகோதரரான பசில் ராஜபக்‌ஷவை நிறுவனராகக் கொண்ட பொதுஜன பெரமுன கட்சியின் மொட்டு சின்னத்தில் போட்டியிட்டு ஜனாதிபதியானார்.

இதன் மூலம் மீண்டும் ராஜபக்‌ஷ சகோதரர்கள் அரியணை ஏறினர்.

2019ஆம் ஆண்டு இறுதியிலிருந்து, தம்பி கோட்டபாய ராஜபக்‌ஷ ஜனாதிபதி, அவரின் அண்ணனான மஹிந்த ராஜபக்‌ஷ பிரதமர், அடுத்த அண்ணனான சமல் ராஜபக்‌ஷ அமைச்சர், பிரதமர் அண்ணனின் மகனான நாமல் ராஜபக்‌ஷ அமைச்சர், அமைச்சர் அண்ணனின் மகனான சஷீந்திர ராஜபக்‌ஷ இராஜாங்க அமைச்சர், சகோதரியின் மகனான நிபுண ரணவக்க பாராளுமன்ற உறுப்பினர் என்று ராஜபக்‌ஷ குடும்பமே நாட்டை ஆளத் தொடங்கியது.

2005, 2010. 2019 ஜனாதிபதித் தேர்தல்களில் மஹிந்த ராஜபக்‌ஷவும் கோட்டபாய ராஜபக்‌ஷவும் ஜனாதிபதிகளாக வெற்றிபெற பல தில்லாலங்கடி வேலைகளில் ஈடுபட்டவர் ராஜபக்‌ஷ சகோதரர்களில் ஒருவரான பசில் ராஜபக்‌ஷ. இதனால்தான் அவரை அரச தரப்பினர் ‘7 மூளைக்காரர்’ என அழைத்துக் கொண்டாடினர். ராஜபக்‌ஷ குடும்பத்தை ஆட்சி அரியணையில் ஏற்றிய பசில் ராஜபக்‌ஷவினால் அந்த குடும்ப அரசில் கோலோச்ச முடியாத நிலை சட்ட சிக்கல்களினால் ஏற்பட்டிருந்தது.

2010ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை மகிந்த ராஜபக்‌ஷவின் அமைச்சரவையில் பொருளாதார அபிவிருத்திக்கான அமைச்சராக இருந்த பசில் ராஜபக்‌ஷ ஜனாதிபதியாக கோட்டபாய ராஜபக்‌ஷ பதவியேற்ற ஆரம்பத்தில் அரசில் இருக்கவில்லை. இவ்வாறான நிலையில்தான், கோட்டபாய ராஜபக்‌ஷவின் தவறான கொள்கை, அரசியல் அறிவின்மை காரணமாக ஆட்சியும் நாடும் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்தது.

இதற்காகவே காத்திருந்த 7 மூளைக்காரரான பசில் ராஜபக்‌ஷ தனது விசுவாச அமைச்சர்கள், எம்.பிக்களை தன்னை தேசியப் பட்டியல் ஊடாக எம்.பியாக்குமாறு அழுத்தங்களை கொடுங்கள் என உசுப்பி விட்டார்.

இதனையடுத்து, நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார, நிதி நெருக்கடிகளைத் தீர்க்க வேண்டுமானால் பசில் ராஜபக்‌ஷ பாராளுமன்றம் வந்து மீண்டும் அமைச்சு பொறுப்புக்களை ஏற்க வேண்டுமென்ற கோரிக்கைகள் வலுப்பெற்றன.

பசில் ராஜபக்‌ஷவை தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக்க கோரி, ஆளும் கட்சியின் 113 எம்.பிக்கள் கடிதம் ஒன்றில் கையொப்பமிட்டு ஜனாதிபதிக்கும் அனுப்பி வைத்தனர்.

அதேவேளை, தேசியப் பட்டியலில் பெயரில்லாத, மாவட்டப் பட்டியலில் பெயரில்லாத ஒருவர் தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றுக்கு பிரவேசம் செய்வதானது அரசியலமைப்புக்கு முரண் இதனைவிடவும், இறுதியாக பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றபோது, பசில் ராஜபக்‌ஷ இரட்டைக் குடியுரிமையைக் கொண்டிருந்தமையால் அவ்வாறு நியமிக்கப்படுவதானது அரசியலமைப்புக்கு முரணானதென்ற எதிர்ப்பு எதிர்க்கட்சிகள் சட்ட நிபுணர்களிடம் இருந்து எழுந்தன.

பசில் ராஜபக்‌ஷ அமைச்சரானால் தான் நாட்டையும் பொருளாதாரத்தையும் பாதுகாக்க முடியும் என்ற திட்டமிட்ட பிரசாரம் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டதால் மக்களும் நம்பத் தொடங்கினர்.

> **பசில் ராஜபக்‌ஷ எடுத்த சில நடவடிக்கைகள் காரணமாக கோட்டபாய ராஜபக்‌ஷவுக்கு ஆதரவளித்த விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட பங்காளிக் கட்சிகள் அரசிலிருந்து வெளியேறின**

இதனைப் பயன்படுத்திக் கொண்டு எதிர்ப்புக்களையெல்லாம் மீறி நாட்டை, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஜயந்த கோட்டேகொட எம்.பி. பதவி விலக அதனூடாக 7 மூளைக்காரரான பசில் ராஜபக்‌ஷ எம்.பியாக்கப்பட்டு, நிதி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்.

ஆனால், இவரது நிதி அமைச்சுப் பதவிக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட தவறான நிர்வாகத்தின் காரணமாகவே நாடு கடனில் மூழ்கியது. ஊழல், மோசடிகள் தலைவிரித்தாடின. வரலாறு காணாத பெரும் பொருளாதார நெருக்கடியை நாடு எதிர்கொண்டு வரிசை யுகம் ஏற்பட்டு மக்கள் வாழ்வதற்காகப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதுமட்டுமல்ல, அரசின் பங்காளிக் கட்சிகளுடனும் பசில் ராஜபக்‌ஷ நல்லுறவு வைத்திருக்கவில்லை. பங்காளிக் கட்சிகளை இல்லாதொழித்து, ஒரே கட்சியாகப் பெரமுனவை வளர்த்தெடுத்து அதன்மூலம், பங்காளிக் கட்சிகளின் தலையீடுகள் இன்றி, 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராகத் தன்னை நிலைப்படுத்துவதே அவரின் திட்டமாக இருந்தது.

இதனால் பங்காளிக் கட்சிகளுக்கு எதிராக பசில் ராஜபக்‌ஷ எடுத்த சில நடவடிக்கைகள் காரணமாக கோட்டபாய ராஜபக்‌ஷவுக்கு ஆதரவளித்த விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட பங்காளிக் கட்சிகள் அரசிலிருந்து வெளியேறின. இதனால் கோட்டபாய ராஜபக்‌ஷ அரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டது. அத்துடன், வரிசை யுகத்தினால் மக்களும் பொறுமையிழந்து கிளர்ச்சியில் ஈடுபட்டதனால் ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டபாய ராஜபக்‌ஷவும் பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்‌ஷவும் விரட்டியடிக்கப்பட்டனர்.

அதுமட்டுமல்ல, நிதி அமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமா செய்து பின்னர் எம்.பி. பதவியிலிருந்து பசில் ராஜபக்‌ஷவும் விலகவும் நேரிட்டதுடன், நாட்டிலிருந்து பின்கதவு வழியாக அமெரிக்காவுக்கும் தப்பிச் சென்றார். அத்துடன், இந்த 7 மூளைக்காரரான பசில் ராஜபக்‌ஷ உள்ளிட்ட ராஜபக்‌ஷக்களைத்தான் உயர் நீதிமன்றமும் “பொருளாதார படுகொலையாளிகள்” என அண்மையில் அறிவித்துள்ளது.

இவ்வாறு நாட்டுக்கும் பொருளாதாரத்திற்கும் மக்களின் வாழ்வாதாரத்திற்கும் பெரும் அழிவை ஏற்படுத்தியவர்களில் முக்கியமானவராக இருந்து விட்டு, மக்கள் கிளர்ச்சியை அடுத்து, பின் கதவால் அமெரிக்காவுக்குத் தப்பிச் சென்று தற்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தயவால் முன் கதவால் நாடு திரும்பியுள்ள பசில் ராஜபக்‌ஷ தான் நாட்டையும் பொருளாதாரத்தையும் காக்கப்போகும் காவலனாக மொட்டுக்கட்சியினர் ஊதிப் பெருப்பித்துக் கொண்டிருக்கின்றனர்.

பசில் ராஜபக்‌ஷவும் நாடு திரும்பியது முதல் தேர்தல்கள் தொடர்பில் தீவிர செலுத்தி வருவதுடன், ஊடகங்களை வரவழைத்துப் பரபரப்பு பேட்டிகளையும் வழங்கி, மொட்டு மீண்டும் மலர்கின்றது.

என்றவொரு தோற்றப்பாட்டை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றார். ஆனால், மக்கள் கடந்த காலத்தை மறக்கும் மறதி நோய்க்கு உட்படாதவரை மொட்டு மீண்டும் மலராது. இது ராஜபக்‌ஷ சகோதரர்களுக்கும் நன்கு தெரியும் என்பதனால், கடந்த காலத்தை மக்களை மறக்க வைப்பதற்காக அவர்கள் எந்த எல்லைக்கும் செல்வார்கள் என்பதும் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் கற்றுக்கொண்ட பாடம்.

## கடிதங்கள்

### மாணவர்கள் நெருக்கடியில்

முல்லைத்தீவு-ஒட்டுசுட்டான் பெரியஇத்திமடு மாணவர்கள் தண்டுவான் பாடசாலைக்கு வந்து செல்வதில் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

முள்ளியவளை-நெடுங்கேணி வீதியில் முல்லைத்தீவு, வவுனியாவுக்கான பஸ் காலையில் சென்று பிற்பகல் 03.00 மணிக்கு பின்னரே திரும்பும் நிலையில், காலையில் மாணவர்கள் பாடசாலைக்கு உரிய நேரத்தில் பெரியஇத்திமடு கிராமத்தில் இருந்து சென்றாலும் பிற்பகல் 03.00 மணிக்கே வீடு திரும்பக் கூடிய நிலைமை உள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பல தடவைகள் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும், இதுவரை இ.போ.சபையின் சேவை மேற்படி வழித் தடத்தில் இடம் பெறவில்லை.

இதன் காரணமாக பெரியஇத்திமடு மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

– நடராசா கிருஸ்ணகுமார்

# Sustainable Niche Touism Learning Expo மூலம் நன்மை



சிறு வணிகங்கள் திறம்பட செயற்படவும் தயாரிப்புகளை மேம்படுத்தவும் உதவும் USAID-SLTDA Learning Expo யுனைடெட் ஸ்டேட்ஸ் ஏஜென்சி ஃபார் இன்டர்நேஷனல் டெவலப்மென்ட் (USAID) மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA) என்பன இணைந்து நடத்திய Sustainable Niche Touism Learning Expo மூலம் சுற்றுலாத் துறையில் 100க்கும் மேற்பட்ட சிறு வணிக செயற்பாட்டாளர்கள் அண்மையில் நுவரெலியா கிராண்ட் ஹோட்டலில் தங்கள் திறன்களை வளர்த்துக்கொள்ள முடிந்தது.

“இது ஒரு அற்புதமான திட்டம். அறிவுப் பகிர்வு அமர்வுகள் குறிப்பாக பயனுள்ளதாக அமைந்தன. மற்றும் எனக்கு நிறைந்த பலத்தை அளித்தது, மேலும் புதிய விருப்பங்களை ஆராயவும், நான் ஊக்குவிக்கப்பட்டேன்” என்று தனது மூதாதையர் வீட்டில் ஒரு சிறிய ஹோம்ஸ்டேயை நடத்தி வரும் கிசிலா சிவம் கூறினார்.

நுவரெலியாவில் நடைபெற்ற நிகழ்வானது, நாடு முழுவதும் நடத்தப்பட்ட இதேபோன்ற நிகழ்வுகளின் தொடரில் ஐந்தாவது நிகழ்வாகும். இதற்கு முன்னர் கொழும்பு, காலி, கண்டி மற்றும் பாசிக்குடா ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட கண்காட்சிகளைத் தொடர்ந்து சிறு வணிகங்கள் தொழில் வல்லுநர்களுடன் தங்கள் திறன்களையும் வலையமைப்பையும் மேம்படுத்த உதவியது. பங்கேற்பாளர்கள் டிஜிட்டல் ரீதியான சந்தைப்படுத்தல், பயணப் போக்குகள் மற்றும் தங்கள் அன்றாட நடவடிக்கைகளில் நிலைத்தன்மையை எவ்வாறு இணைப்பது என்பதைப் பற்றி அறிந்து கொண்டனர். அவர்கள் வழிகாட்டுதல் அமர்வுகளுக்கான அணுகலைப் பெற்றனர்.

**சுற்றுலாத் துறையில் 100க்கும் மேற்பட்ட சிறு வணிக செயற்பாட்டாளர்கள் அண்மையில் நுவரெலியா கிராண்ட் ஹோட்டலில் தங்கள் திறன்களை வளர்த்துக்கொள்ள முடிந்தது**

மற்றும் தயாரிப்பு மேம்பாடு, சந்தைப்படுத்தல், விளம்பரங்கள் மற்றும் அவர்களின் செயல்பாடுகளில் நிலைத்தன்மையை இணைத்துக்கொள்வதில் கவனம் செலுத்தும் கருவித்தொகுப்புகளையும் பெற்றனர்.

இலங்கையின் பன்முக சுற்றுலா சலுகைகள், சர்வதேச மற்றும் உள்நாட்டு பயணிகளின் கோரிக்கைகளை பூர்த்தி செய்ய சிறு வணிகங்களுக்கு மகத்தான ஆற்றலைக் கொடுத்துள்ளன. ஒரு செழிப்பான சுற்றுலாத் துறையை நிறுவ, சிறு வணிக உரிமையாளர்களை நவீன மயப்படுத்தவும், அவர்களின் தயாரிப்புகளைச் செம்மைப்படுத்தவும், பயணிகளின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப நிலையான விருந்தினர் அனுபவங்களை வழங்கவும் அதிகாரம் அளிப்பது இன்றியமையாதது.

ஜூன் 2023 இல், சாகச சுற்றுலா மற்றும் கலாசார அனுபவங்கள் முதல் தொகுக்கப்பட்ட/தேர்ந்தெடுக்கப்பட்ட அனுபவங்கள் மற்றும் ஆரோக்கியம் மற்றும் குணப்படுத்துதல் வரை 12 புதிய முக்கிய சுற்றுலா வகைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் இலங்கை தனது சுற்றுலா சலுகைகளை மீண்டும் நிலைநிறுத்தியது.

சிறு வணிகங்களின் போட்டித்தன்மையை மேம்படுத்தவும், இலங்கை தனது வர்த்தக அடையாளத்தை சிறப்பாக நிலைநிறுத்தவும், அதன் ஈர்ப்பு மற்றும் சந்தைப் பங்கை அதிகரிக்கவும், சுற்றுலா முழுவதும் வேலை வாய்ப்புகள் மற்றும் வாய்ப்புகளை உருவாக்கவும், புதிய முக்கிய சுற்றுலா வகைகளை அறிமுகப்படுத்தியதன் நேரடி தொடர்ச்சியாக இந்த கற்றல் கண்காட்சி அமைந்தது. அந்நிய செலாவணி உருவாக்க. பல்வேறு வகையான விற்பனையாளர்கள் சிறு வணிகங்கள் தங்கள் சேவைகளை மேம்படுத்தவும், தங்கள் விநியோகச் சங்கிலிகளில் நிலைத்தன்மையை ஏற்படுத்தவும் பயன்படுத்தக்கூடிய தயாரிப்புகளை காட்சிப்படுத்தினர்.


பெண்கள், சிறுபான்மை சமூகங்கள் மற்றும் பிற பின்தங்கிய குழுக்களுக்கு அவர்களின் சொந்த தனித்துவமான வழியில் பங்கேற்பதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் ஒரு இலக்கை உள்ளடக்கிய வாய்ப்புகளை வழங்க சுற்றுலா அனுமதிக்கிறது. இது அதிக சுமை உள்ள பகுதிகளில் உள்ள அழுத்தத்தை குறைக்க உதவுகிறது மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் இயற்கை பேரழிவுகளின்போது தாக்குப்பிடிக்கக் கூடியதாக நாட்டை மாற்றுகிறது.

**2022 ஜூலையில் பொருளாதார சீர்திருத்தங்களை ஆதரிப்பதற்கும் இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஊக்குவிப்பதற்கும் ஆரம்பிக்கப்பட்டது**

USAID இன் IPOP திட்டம் 2022 ஜூலையில் பொருளாதார சீர்திருத்தங்களை ஆதரிப்பதற்கும் இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஊக்குவிப்பதற்கும் ஆரம்பிக்கப்பட்டது. சுற்றுலாத் துறையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை விரைவாகக் கண்காணிப்பதற்கும் ஈர்ப்பதற்கும் புதிய கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை நெறிப்படுத்தவும் செயல்படுத்தவும் இந்த இரண்டாண்டுத் திட்டம் SLTDA க்கு உதவுகிறது.



# அம்மாயானையும், இரு யானைக்குட்டிகளும்



ஷெல்லிதாசன்



ஒரு சிறிய காடு, அந்த சிறிய காட்டில் ஒரு அம்மா யானையும் இரண்டு குட்டி யானைகளும் வசித்து வந்தன. ஒரு குட்டியின் பெயர் குட்டிராஜா அடுத்த குட்டியின் பெயர் குட்டிராணி.

ஒருநாள் காலை வேளை அம்மா யானை “பிள்ளைகளே உங்களுக்கு உணவு எடுத்துவர அண்மையிலுள்ள பெரிய காட்டுக்கு இன்று நான் போகப் போகிறேன்”

“அம்மா அம்மா நாங்களும் உங்களுடன் வருகிறோம்” என இரு யானைக்குட்டிகளும் அடம் பிடித்தன.

“வேண்டாம் பிள்ளைகள் நீங்கள் இருவரும் நான் வரும் வரையிலும் எங்கேயும் போகாமல் இங்கேயே இருங்கள். நான் விரைவில் போய் உங்களுக்காய் காய்,கனி, இலை தளைகளை விரைந்து எடுத்துவாறன்” என இரு குட்டிகளுக்கும் சொன்னது அந்த அம்மா யானை.

“ஏனம்மா எங்கட காட்டிலை உணவில்லையே.. நீங்கள் தூரத்துக்கு ஏன் போகவேணும்"

“எங்கட காடு ஒரு காலத்தில பெருங் காடாத்தான் இருந்தது, இப்போது இது வெறும் பற்றைக் காடாகமட்டும் இருக்கிறது, இங்கே எப்படி உணவு தேட முடியும் பிள்ளைகளே"

“அம்மா ஏனம்மா எங்கடகாடு பற்றைக் காடாய் போனது" குட்டிராணி குறுக்குக் கேள்விகேட்டது அம்மாவிடம்.

“அதுவோ .... ஒரு காலத்திலை எங்கட காட்டிலை முதிரைமரம், பாலை, சமண்டலை, கருங்காலி, தேக்கு எண்டு பலவகையான பெரிய மரங்கள் நிறைந்திருந்தன, இன்று அவை அழிந்து விட்டன…இல்லை… இல்லை… அழிக்கப்பட்டு விட்டன..பிள்ளைகளே"

“ஏனம்மா அழிக்கப்பட்டு விட்டனவா?” ஆச்சரியத்துடன் இரு யானைக்குட்டிகளும் அம்மாவைப் பார்த்துக் கேட்டன.

“ஓம் பிள்ளைகள் மனிதர்கள் தமது தேவைக்காக அந்த மரங்களை தறித்து எடுத்துச் சென்றுவிட்டார்கள். மரங்களைத் தறிக்கக் கூடாதென சட்டமிருந்தும் கள்ளமாக அவற்றை இரவு பகலாக வெட்டி எடுத்துச் சென்று விட்டார்கள். அதனால் எமது பெரியகாடு அழிந்து குட்டிபுதரக் காடாய் மாறிப்போச்சுது பிள்ளைகள். அதன் காரணமாக எமது சந்ததிக்கு இங்கு உணவு கிடைப்பது அரிதாகி விட்டது. எமது இனத்தவர்கள் பலர் ஒரு காலத்தில் இங்கு கூட்டம் கூட்டமாக வாழ்ந்து வந்தனர். இப்போது நாமும் அயலிலுள்ள சில யானைகளுமே இங்கு இருக்கறார்கள் ஏனையோரெல்லாம் உணவு தேடிடம் பெயர்ந்து விட்டார்கள் பிள்ளைகளே.

அம்மா யானை தனது குட்டி யானைகளுக்கு ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து விட்டது.

அதனைக் கேட்ட இரு யானைக்குட்டிகளும் “சரி அம்மா நீங்கள் போய் உணவு தேடி வாருங்கள், நாங்கள் இரண்டு பேரும் இங்கேயே இருந்து விளையாடிக் கொண்டிருக்கின்றோம்" என சம்மதம் தெரிவித்தன.

“அது சரி பிள்ளைகள் நான் போன பிறகு நீங்கள் இரண்டு பேரும் ஒரு இடமும் போகக் கூடாது, வெளியிடங்களில சிங்கம், புலி நிற்கும் வேற ஆபத்துக்களும் காத்திருக்கும், ஒரு இடமும் நீங்கள்…நான் வரும்வரையில் போகவே கூடாது, அப்படி போனதை அறிஞ்சால் என்னைப்பற்றி தெரியும் தானே, அம்மா பொல்லாத வளாக மாறிடுவன்". என எச்சரித்துவிட்டு பிள்ளைகளிடமிருந்து விடைபெற்றுச் சென்றது அம்மா யானை.

அம்மா போன பின் குட்டா ராஜாவும் குட்டிராணியும் ஓடியாடி விளையாடி சந்தோசமாக பொழுதைக் கழித்துக் கொண்டிருந்ன.

திடீரென ஒரு சத்தம் எதிர் திசையிலிருந்து வந்தது, அடுத்த காட்டில் வசித்தஒரு யானைக்குட்டி இவர்களை நோக்கி சத்தம் போட்டபடி வந்து கொண்டிருந்தது.

“அண்ணை அதோ கஜன் வாறான்" “ஓம் தங்கச்சி அவன் எங்களோடை சேந்து விளையாடவாறான் வரட்டும்".என்றது குட்டிராஜா. அவைகளுக்கு கிட்டவந்த கஜன் “எங்க உங்கட அம்மாவைக் காணேல்லை" “அவ பெரிய காட்டுக்கு உணவுதேடப் போயிட்டா கஜன்" என்றது குட்டிராணி.

“அப்ப நல்லதாப்போச்சு நாங்கள் இப்ப இங்க இருந்து வெளியேறி காடுகளை பார்த்து ரசித்து விளையாடலாம்.. வருவீங்க தானே".

“ஐயையோ நாங்கள் வரமாட்டம் அம்மா அடிப்பா" என்றது இரு யானைக்குட்டிகளும்.

அஹ… அஹ… என சிரித்த கஜன் “அம்மாவுக்கு பயந்த பிள்ளைகள் அதுவும் இந்தக் காலத்தில….உங்களுக்கு வெக்கமில்லையா" என பெரிதாகக் கத்தியது.

“நீ இம்மாவுக்கு பயப்படாமல் இரு… நாங்கள் அம்மாவின் சொல்லைத் தட்டமாட்டம். “நீ வேண்டுமானால் போ நாங்கள் வரமாட்டம் என்றது குட்டிராஜா.

“இங்கை இருந்து என்ன தான் செய்யப் போறீங்கள்…உங்களது அம்மா வரும் முதல் நாம் வந்து கப்சிபென எதுவும் சொல்லாமல் இருப்பம் வாருங்கள்" என பல முறை வற்புறுத்திய கஜன்.

“அம்மா அறிஞ்சாலும் நான்தான் உங்களைக் கூட்டிக் கொண்டு போனனான் எண்டு சமாதானப்படுத்திடுவன். “உங்கள் அம்மாவுக்கு என்னை நல்லாத் தெரியும்” என பல சாட்டுக்கள் சொல்லி ராஜாவையும் ராணியையும் தனது வசப்படுத்தி வெளியே அழைத்துச் சென்றது.

ராஜா ராணி யானைக்குட்டிகளை கஜன் யானைக்குட்டி ஒரு குளத்துக்கு அழைத்துச் சென்றது.

அது அழகிய குளம் அதுமட்டுமல்ல, பெரியகுளம். அதில் நீர் நிறைந்துதலை தட்டிக் கொண்டிருந்தது. களம் முழுவதும் அழகிய தாமரை மலர்கள் பூத்துக் குலுங்கி நின்றன. தாமரை இலைச் சித்திரம் வரைந்தது போல அழகாக காட்சி அளித்தன.. வண்டுகள் பூக்களை மொய்த்து ரீங்காரம் பாடிக்கொண்டிருந்தன.

“நண்பர்களே பார்த்தீர்களா… எவ்வளவு அழகிய குளம்.. இதையெல்லாம் பார்கிறதை விட்டுவிட்டு வீட்டுக்குள்ளை அம்மா பிள்ளையாய் இருந்தால் வெக்கமில்லையா" என்ற கஜன் “சரி வாருங்கள் மூவரும் இந்தக் குளத்திலை இறங்கிக் குளித்து விளையாடுவோம்." என இரு யானைக்குட்டிகளையும் அது அழைத்தது.

“ஐயையோ.. எனக்குப் பயம் நான் வரமாட்டன்" என முரண்டு பிடித்தது குட்டிராணி “தங்கச்சிராணி வராட்டிநானும் வரமாட்டன் குளத்தல் குளிக்க" குட்டிராஜா நிபந்தனை போட்டது “அடி குட்டிராணி நீ பயப்பாடாதை நான் உனக்குப் பக்கத்திலை இருப்பன் வாடிவா" என்ற கஜன் குட்டி ராணியை தனது தும்பிக்கையால் இழுத்து வலுக்கட்டாயமாக குளத்தில் இறக்க குட்டிராஜாவும் குளத்தில் இறங்கியது.

மூன்று யானைக் குட்டிகளும் குளத்தில் இறங்கி நீரில் மூழ்கி எழுவதும் தும்பிக்கையால் நீரை உறுஞ்சி எடுத்து ஒருவருக்கொருவர் பீச்சியடித்து மெய்மறந்து விளையாடிக் கொண்டிருந்தன.

அந்ததாமரைக் குளத்தில் பெரிய முதலையொன்று பல வருடங்களாக வசித்து வந்தது. அவ்வப்போது குளத்துக்கு நீர் அருந்தவரும் மான், மரைகளை திடீரென வந்து பிடித்து உணவாக்கி வந்தது அது.

குளக்கரையில் யானைக் குட்டிகளால் எழுந்த பலத்த சத்தத்தால் உசாரடைந்த அந்த முதலை மெல்ல மேலே தலையை உயர்த்தி நீரின் மேல் எட்டிப்பார்த்தது.“ஆஹா இன்று நல்ல வேட்டைதான், ஒரு யானைக்குட்டியை எப்படியாவது மடக்கினால் ஒரு மாதத்துக்கு உணவுக்கு பஞ்சமில்லை" என மனதுக்குள் எண்ணிய முதலை, நீரிலுள்ளாக ஒரு நீர் மூழ்கிக் கப்பலைப்போல யானைக்குட்டிகள் எந்த விதத்திலும் அறியாமல் மெல்ல மெல்ல யானைக் குட்டிகளின் அருகில் வந்து திடீரென ஒரு யானைக்குட்டியின் காலை தனது அகன்ற கூர்மையான பற்களைக் கொண்ட வாயால் கௌவிக் கொண்டது அந்த முதலை.

“ஐயோ. .. ஐயோ… எனது கால் ஐயோ…" என ராணி யானைக்குட்டி பலமாக பிளிறியபடி கத்தியது.

ஏனைய யானைக்குட்டிகளுக்கு நிலைமை புரிந்து விட்டது. பெரிய முதலையொன்று ராணிகுட்டியின் காலைக் கடித்து குளத்துக்குள்ளே இழுக்க பெரிய பிரியத்தனம் எடுத்தபடி இருந்தது.

ராஜாவும், கஜனும் குளத்துக்கு வெளியே ஓடி வந்து தும்பிக்கைகளை மேலே உயர்த்தி பலமாகக் கத்தின. குட்டிராணி “காப்பாத்துங்கோ…. என்னைக் காப்பாத்துங்கோ" எனப் பலமாகக் கத்தியபடி இருந்தது.

நடுக்காட்டில் பிள்ளைகளுக்காக உணவு தேடிக்கொண்டிருந்த அம்மா யானைக்கு குட்டி யானைகளின் அவலக்குரல் கேட்டது. அது தனது குட்டிகளின் குரல்களை இனங்கண்டு தேடிய உணவுகளைஅந்த இடத்திலேயே போட்டு விட்டு உடனடியாக குரல்கள் வந்த திக்கை நோக்கி தனது பெரியகால்களை விரைந்து எடுத்து வைத்து ஓடியது.

ஓடி வந்த அம்மா யானை பெரிய களத்தின் கரையை அடைந்தவேளை, அது கண்டகாட்சி அதற்கு தாங்க முடியவில்லை. தனது ராணிகுட்டி பெரிய முதலையுடன் போராடிக் கொண்டிருந்ததைக் கண்ட அம்மாயானை உடனடியாக குளத்துக்குள் சென்று தனது குட்டியை கடித்திழுக்கும் முதலையை தனது தும்பக்கையால் ஒரு அடி அடித்ததுடன் தனது பலமான முன்னங் காலால் ஓர் உதை உதைத்தது.

அதன் பலமான அடியையும், உதையையும் தாங்காது தப்பினோம் பிழைத்தோமென நினைத்த முதலைகுட்டி ராணியின் கௌவிய காலை விட்டு விட்டு நீரில் ஓடி மறைந்தது.

பாரிய ஆபத்திலிருந்து ராணி யானைக்குட்டி “அம்மா என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ…அம்மா உங்கடசொல்லை தட்டி வந்ததுக்கு நல்ல பாடமம்மா" என அழுதபடி நொண்டி நொண்டி அம்மாவை தழுவ, அம்மா யானையும் கண்ணீர் வடித்தபடி தனது குட்டியை ஆதரவாகத் தழுவியது.

ஆனால், அடுத்தகணம் “நான் வழிக்கு வழி சொல்லித்தானே போனனான், யார் உங்களை இங்கு வரச் சொன்னது" கோபமாகக் கத்தியது.

“அது..அது.. அந்த கஜன் தான் எங்களை அழைத்து வந்தான், அண்ணாவும் நானும் வேண்டாம் வேண்டாம் என்று அடம்பிடித்தும் அவன் தான் வலுக்கட்டாயமாக அழைத்து வந்தானம்மா" என்றது குட்டிராஜா.

“ஆர் அவனோ….எங்கை அவன்" என்ற அம்மாயானை கஜனை பிடித்து அடித்து வைக்க அவனை நோக்கி விரைந்து ஓடியது.

“பிடிபட்டால் தொலைஞ்சன்" என்ற கஜன் யானைக்குட்டி ஒரே ஓட்டமாக ஓடிக்கொண்டிருந்தது.

கஜனைத் துரத்திப் பிடிக்க அம்மா ஓடுவதைப் பார்த்த குட்டிராஜா பலமாகச் சிரிக்க, தனது கடிபட்ட காலை தூக்கியபடி குட்டிராணியும் பலமாகச் சிரித்தது.

“தீயார் சொல் கேட்பதுவும் தீதே”

சவூதி அரேபியா

# அழகி போட்டியில் சவூதியும் பங்கேற்பு

அரேபிய தீபகற்பத்தின் மிகப்பெரிய நாடான சவூதி அரேபியா, கடுமையான சமூக மற்றும் மதக் கட்டுப்பாடுகளை பின்பற்றி வருகிறது. இருப்பினும், சமீப காலமாக அங்கு பல்வேறு கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுகின்றன. பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானின் தலைமையில் பல மாறுதல்கள் கொண்டு வரப்படுகின்றன.

இந்த மாற்றம் உலகளவில் கவனத்தை ஈர்த்துள்ளது. குறிப்பாக பெண்கள் மீதான கட்டுப்பாடுகளை நீக்கி, அவர்கள் வாகனம் ஓட்டவும், கலப்பு-பாலின நிகழ்வுகளில் கலந்து கொள்ளவும் மற்றும் ஆண் பாதுகாவலர் இல்லாமல் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, சவூதி அரேபியா முதன்முறையாக பிரபஞ்ச அழகி போட்டியில் பங்கேற்க உள்ளது. இதன்படி,



2024 பிரபஞ்ச அழகி போட்டியில் சவூதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தைச் சேர்ந்த 27 வயதான மொடல் அழகி ரூமி அல்காதானி பங்கேற்க உள்ளார்.

இது குறித்து ரூமி அல்காதானி கூறுகையில், சவூதி அரேபியாவின் உண்மையான கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை உலகிற்கு பறைசாற்றும் வகையிலும் தனது செயல்பாடுகள் இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்பு ரூமி அல்காதானி மிஸ் சவூதி அரேபியா, மிஸ் மிடில் ஈஸ்ட் (சவூதி அரேபியா), மிஸ் அராப் வேர்ல்ட் பீஸ் 2021 மற்றும் மிஸ் உமன் (சவூதி அரேபியா) ஆகிய பட்டங்களை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேரிலேண்ட்

# பாலம் மீது கப்பல் மோதியதில் 6 பேர் பலி

### கொழும்புக்கு வரும் வழியில் அனர்த்தம்

அமெரிக்காவின் மேரிலேண்ட் மாகாணத்தில் பால்டிமோர் பகுதியில் பிரான்சிஸ் ஸ்காட் என்ற பெயரிலான மிக பெரிய பாலம் ஒன்று அமைந்துள்ளது. இதன் வழியே, சரக்கு மற்றும் பயணிகள் கப்பல் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. பாலத்தின் மீது வாகன போக்குவரத்தும் நடந்து வருகிறது.

இந்நிலையில், சிங்கப்பூர் கொடியுடன் கூடிய டாலி என்ற பெயரிலான பெரிய சரக்கு கப்பல் ஒன்று பால்டிமோர் வழியே, இலங்கையின் கொழும்பு நகருக்கு சென்று கொண்டிருந்தது. அந்த கப்பல் திடீரென பாலத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது.

இதில், பாலத்தின் ஒரு பகுதி இடிந்து நீருக்குள் விழுந்தது. இதனால் பாலத்தில் சென்று கொண்டிருந்த பல வாகனங்கள் நீரில் விழுந்தன. இந்த சம்பவத்தில், பாலத்தின் மீது மோதிய வேகத்தில் கப்பல் தீப்பிடித்து கொண்டது. பின்னர் அது நீரில் மூழ்கியது. பால விபத்தில் சிக்கிய தொழிலாளர்களில் 6 பேர் பலியாகினர்.



பெங்களூர்

# அரை நிர்வாண கோலத்தில் பெண் செய்த காரியம்

பெங்களூரில் இளம்பெண்கள் போதையில் நடமாடுவது அதிகரித்தபடியே வருகிறது. இந்த போதையை பயன்படுத்திக் குற்றச் சம்பவங்களும் ஆங்காங்கே நடந்து கொண்டிருக்கின்றன.

இந்நிலையில், இளம் பெண்ணொருவர் அதிக போதையில், அரை நிர்வாண கோலத்தில் காரை வேகமாக ஓட்டி வந்துள்ளார்.

குறித்த பெண்ணின் கார் வீதியில் தாறுமாறாகச் செல்வதை, வாகன ஓட்டிகள் பார்த்துப் பதறிவிட்டார்கள். ஓட்டோ சாரதி ஒருவர், “காரை பார்த்து ஓட்டி செல்லுங்கள்” என அந்த பெண்ணிடம் தெரிவித்துள்ளார்.

அவ்வளவுதான் அந்த பெண்ணுக்குக் கோபம் வந்து விட்டது. உடனே காரிலிருந்து ஆவேசமாக இறங்கி வந்தார். ஓட்டோ சாரதியின் சட்டையைப் பிடித்து கன்னத்தில் பளார்... பளார்... என அறைய ஆரம்பித்தார். “துப்பாக்கியால் சுட்டு பொசுக்கிடுவேன்” என்றும் மிரட்டியுள்ளார்.




கவுகாத்தி

# ‘போன் பே’யில் யாசகம் பெற்ற யாசகர்

கவுகாத்தியில் போன்பே பயன்படுத்தி யாசகர் ஒருவர் யாசகம் பெற்றுள்ள காட்சி இணையத்தளங்களில் ட்ரெண்ட் ஆகி வருகிறது. “சிந்தனையைத் தூண்டும் தருணம்” என அசாம் காங்கிரஸ் கட்சி நிர்வாகி இந்த வீடியோவை தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளார்.

தற்போதைய டிஜிட்டல் யுகத்தில் கற்பனை செய்து பார்க்காத அளவுக்குத் தொழில்நுட்பம் வளர்ந்து விட்டது. வீட்டை விட்டு வெளியே ஒரு அடி கூட எடுத்து வைக்காமல் உணவுப் பொருள் முதல் ஆடை ஆபரணங்கள் வரை வாங்கிவிடலாம். ஒரு காலத்தில் கால் கடுக்க நடந்து வங்கியில் நீண்ட வரிசையில் காத்திருந்து பணத்தை வேறு ஒருவருக்கு அனுப்பி வைத்த காலம் எல்லாம் மலையேறி விட்டது.

யாசகர்கள் மட்டும்தான் டிஜிட்டல் பண




பரிவர்த்தனையை யூஸ் பண்ணலன்னு பேச்சு வாக்கில் சொல்வதுண்டு. இனி அதையும் சொல்ல முடியாது என கூறும் வகையில், யாசகர் ஒருவர் ‘போன் பே’ மூலமாக யாசகம் பெற்றுள்ள காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

சென்னை

# வடையுடன் தமிழிசை பிரசாரம்

தென் சென்னை மக்களவை தொகுதியில் போட்டியிடும் முன்னாள் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் புதன்கிழமை(27) தனது பிரசாரத்தை ஆரம்பித்துள்ளார்.

தெலுங்கானா ஆளுநர், புதுச்சேரி துணை நிலை ஆளுநராக பதவி வகித்து வந்த தமிழிசை சவுந்தரராஜன், சில தினங்கள் முன் தனது பதவிகளை இராஜினாமா செய்துள்ளார். பின்னர் அரசியலில் இறங்கப்போவதாக அறிவித்த அவர், தமிழகத்தில் இருந்து தேர்தலில் போட்டியிடப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளார். அதன்படி, தென்சென்னை தொகுதியின் பாரதிய ஜனதா கட்சி வேட்பாளராக மீண்டும் தேர்தல் அரசியலில் காலடி எடுத்து வைத்துள்ள தமிழிசை, திங்கட்கிழமை (25) வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

கோயம்பேடு பகுதியில் பிரசாரம் செய்த அவர், நடைபாதையில் சில பெண்களால் நடத்தப்படும் கடையில் கட்சிக்காரர்களுடன் வடை வாங்கி உட்கொண்டுள்ளார்.



# ஐ.பி.எல்: குஜராத்தை வீழ்த்திய சென்னை

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), சென்னையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற குஜராத் டைட்டான்ஸ் உடனான போட்டியில் நடப்புச் சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற குஜராத்தின் அணித்தலைவர் ஷுப்மன் கில் தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை, றஷின் றவீந்திரவின் 46 (20), ஷிவம் டுபேயின் 51 (23), அணித்தலைவர் ருத்துராஜ் கைகவாட்டின் 46 (36), டரைல் மிற்செல்லின் ஆட்டமிழக்காத 24 (20), சமீர் றிஸ்வியின் 14 (06) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 206 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலுக்கு 207 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய குஜராத், தீபக் சஹர் (2), டரைல் மிற்செல், துஷான் தேஷபந்தே (2), தாக்கம் செலுத்தும் மாற்றுவீரராக டுபேக்குப் பதில் களமிறங்கிய மதீஷ பத்திரண, முஸ்தபிசூர் ரஹ்மானிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 143 ஓட்டங்களையே பெற்று 63 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.



இப்போட்டியின் நாயகனாக டுபே தெரிவானார்.

இந்நிலையில் ஜெய்ப்பூரில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸை ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

# இலங்கைக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் ஷகிப்



டெஸ்ட் போட்டிகளில் ஓராண்டு விளையாடமல் இருந்த பங்களாதேஷின் முன்னாள் அணித்தலைவர் ஷகிப் அல் ஹஸன் பங்களாதேஷ் டெஸ்ட் குழாமுக்குத் திரும்பியுள்ளார்.

இலங்கைக்கெதிரான இரண்டாவது டெஸ்டுக்காக ஷகிப் தெரிவு செய்யப்பட்டுள்ளார். குழாமில் தெளஹிட் ஹிரிடோயையே ஷகிப் பிரதியிட்டுள்ளார்.

இதுதவிர, காயமடைந்த வேகப்பந்துவீச்சாளர் முஸ்ஃபிக் ஹஸனை இன்னொரு டெஸ்ட் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொள்ளாத ஹஸன் மஹ்மூட் பிரதியிட்டுள்ளார்.

### உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

# ஆப்கானிஸ்தானிடம் தோற்ற இந்தியா

எதிர்வரும் 2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளன உலகக் கிண்ணத் தொடருக்கான ஆசிய கால்பந்தாட்ட சம்மேளன தகுதிகாண் போட்டிகளில், தம்நாட்டில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஆப்கானிஸ்தானுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் இந்தியா தோற்றது.



# பக்கீரான்வெட்டை மைதான காணி: தெளபீக் எம்.பி களத்தில்

எப்.முபாரக்

ஆயிலியடி பக்கீரான்வெட்டை பிரதேச மக்களுடைய நீண்டகால கோரிக்கையாக இருந்த பொது விளையாட்டு மைதான காணியைப் பெற்றுக்கொடுப்பதற்காக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தெளபீக், அப்பிரதேசத்துக்கு கள விஜயமொன்றை அண்மையில் மேற்கொண்டார்.

இதன்போது, அப்பிரதேச பள்ளிவாசல் நிர்வாகம், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் மற்றும் காணி உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டதுடன் அச்சந்திப்பில் சில முக்கியமான தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.



### சிநேகபூர்வப் போட்டிகளில்

# ஸ்லோவேனியாவிடம் தோற்ற போர்த்துக்கல்

ஸ்லோவேனியாவில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான சிநேகபூர்வப் போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் உள்ளது.

இதேவேளை, ஸ்பெய்னில் நடைபெற்ற அவ்வணிக்கும், பிரேஸிலுக்குமிடையிலான போட்டியானது 3-3 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. ஸ்பெய்ன் சார்பாக றொட்றி இரண்டு கோல்களையும் டனி ஒல்மோ ஒரு கோலையும் பெற்றனர். பிரேஸில் சார்பாக றொட்றிகோ, என்ட்றிக், லூகாஸ் பக்கெட்டா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



இந்நிலையில், தம்நாட்டில் நடைபெற்ற பெல்ஜியத்துடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து சமப்படுத்தியது. பெல்ஜியம் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் யூரி டிலிமான்ஸ் பெற்றதோடு, இங்கிலாந்து சார்பாக இவான் டோனி, ஜூட் பெல்லிங்ஹாம் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

தவிர, நெதர்லாந்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-1 என்ற கோல் கணக்கில் ஜேர்மனி வென்றதுடன், எகிப்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 4-2 என்ற கோல் கணக்கில் குரோஷியா வென்றது.

இதேவேளை தமது நாட்டில் நடைபெற்ற சிலியுடனான போட்டியை 3-2 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் வென்றதோடு, பிரான்ஸில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் உருகுவேயை ஐவரி கோஸ்ட் வென்றிருந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 28 மார்ச் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.